


சென்னை மியாட் மருத்துவமனையில் இந்தியாவிலேயே முதன் முறையாக எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை முறையை இங்கிலாந்து மந்திரி கென்னத் கிளார்க் அறிவிப்பு பலகையை திறந்து வைத்தார். அருகில் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் பேராசிரியர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ், தென்னிந்தியாவிற்கான இங்கிலாந்து துணை தூதர் மைக் நித்தாவிரயன்கிஸ், லண்டன் சுகாதார செயலாளர் ஹவார்ட்டு லைன்ஸ், லண்டனை சேர்ந்த கேன்சர் நிபுணர் டாக்டர் நிக்கி ஹர்பர் ஆகியோர் உள்ளனர்.

# எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை

## மியாட் மருத்துவமனையில் அறிமுகம்

சென்னை, மே.10– நாட்டிலேயே முதன் முறையாக சென்னை மியாட் மருத்துவமனையில் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை முறையை இங்கிலாந்து மந்திரி தொடங்கிவைத்தார்.

### மியாட் மருத்துவமனை

இந்தியாவிலேயே முதன் முறையாக எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை முறை தொடக்க விழா சென்னை மியாட் மருத்துவமனையில் நேற்று நடந்தது. மருத்துவமனை நிர்வாக இயக்குனர் பேராசிரியர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் தலைமை தாங்கினார். இங்கிலாந்து மந்திரி கென்னத் கிளார்க் அறுவை சிகிச்சையை குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

விழாவில் தென்னிந்தியாவிற்கான இங்கிலாந்து துணை தூதர் மைக் நித்தாவிரயன்கிஸ், லண்டன் சுகாதார செயலாளர் ஹவார்ட்டு லைன்ஸ், லண்டனை சேர்ந்த கேன்சர் நிபுணர் டாக்டர் நிக்கி ஹர்பர், மியாட் மருத்துவமனை ரத்த நோய் பிரிவு நிபுணர்கள் டாக்டர் ஜாய்தீப் சக்கரபர்த்தி, டாக்டர் செழியன் சுபாஷ் உட்பட மருத்துவத்துறையை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

### எலும்பு மஜ்ஜை

இதுகுறித்து மியாட் மருத்துவமனை இணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ், நிருபர்களிடம் கூறியதாவது:–

ரத்தம் தொடர்பான சுமார் 72–க்கும் மேற்பட்ட கோளாறுகளும், வியாதிகளும் உள்ளன. இதில் பெரும்பாலானவை நாட்டிலுள்ள மோசமான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வல்லமையின்மை காரணமாக கண்டறியப்படாமலும் சிகிச்சையளிக்கப்படாமலும் சென்று விடுகின்றன. ரத்தப்புற்று நோய்கள், தலசிமியா மற்றும் தன்னுடலை தாக்கும் குறைபாடுகளுக்கு சிகிச்சையாக எலும்புகளுக்கு உள்ளே உள்ள ரத்தத்தை எடுத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனை எலும்பு மஜ்ஜை சிகிச்சைகள் என்று அழைக்கப்படுகிறது. கடந்த பிப்ரவரி வரை உலகம் முழுவதும் ஒரு மில்லியன் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சைகள் நடந்துள்ளன. ஆனால் இந்தியாவில் 2,500 மாற்று சிகிச்சை நடந்துள்ளது.

### 40 ஆயிரம் நோயாளிகள்

இதற்கு மிகப்பெரிய சவாலாக இருப்பது தானம் செய்பவர்களை கண்டறிவது தான். இந்தியாவில் 40 ஆயிரம் நோயாளிகளுக்கு மேல் காத்திருக்கின்றனர். ஆனால் நம் நாட்டில் உறுப்பு தானத்திற்கான பதிவு மையங்கள் இல்லாததால், மேலை நாடுகளை நம்பியே இருக்கவேண்டி உள்ளது. மேலை நாடுகளில் ஒரு கோடி ரூபாய் வரை செலவிட வேண்டி உள்ளது. ஆனால் மியாட் இண்டர்நேஷனல் மருத்துவமனையில் நோயாளிகளின் உறவினர்களிடமிருந்தே இந்த எலும்பு மஜ்ஜைகளை பெறுவதால் ரூ.10 முதல் ரூ.15 லட்சத்தில் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை அளிக்கப்படுகிறது.

அதாவது 50 சதவீதம் பொருந்தக்கூடிய தானம் அளிப்பவரிடமிருந்து பெறப்படும் எலும்பு மஜ்ஜை மூலம் நூறு சதவீதம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறது. நாட்டிலேயே முதன் முறையாக மியாட் மருத்துவமனையில் இந்த சிகிச்சை முறை தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான நோயாளிகளுக்கு நம்பிக்கை ஒளியை அளிக்கிறது.

### கதிர்வீச்சு புற்று நோய்

மியாட் மருத்துவ குழுவில் ரத்தவியல் நிபுணர்கள், ரத்த நோயியல் நிபுணர்கள், ரத்தப் புற்று நோயியல் நிபுணர்கள், கதிர்வீச்சு புற்று நோய் வல்லுநர்கள், லேப் டெக்னிசியன்கள், ஊட்டச்சத்து நிபுணர்கள், பயிற்சி பெற்ற நர்சுகள் மற்றும் ஆலோசகர்கள் போன்று ஒரு வெற்றிகரமான மாற்று சிகிச்சைக்கு தேவைப்படும் அனைவரும் உள்ளனர்.

மியாட்டின் உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் மருத்துவமனை மையத்திலும் 24 மணி நேர அதிநவீன பரிசோதனையகத்திலும் வழங்குகிறது. உலகில் 8–வது இடத்தை பெற்றது. அதிநவீன உள்கட்டமைப்பு வசதிகள், இதர சிறப்பு சேவைகள், ரத்தம் தொடர்பான நோய்களுக்கு பிரத்யேகமாகவும் கவனிக்கப்படுகிறது. சர்வதேச அளவில் அதிநவீன பரிசோதனை வசதிகள் மற்றும் சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற ரத்த நோயியல் நிபுணர்கள் உட்பட பிரத்யேக வல்லுனர்களும் டெக்னிசியன்களும் பணியாற்றுகின்றனர். வெண்செல் குறைந்த ரத்தத்துடன் கூடிய 24 மணி நேர ரத்த வங்கியும் செயல்படுகிறது. ஆக அதிநவீன முன்னோடி மையமாக மியாட் செயல்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.